செல்வி செல்லையா சிவநந்தனி

ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

# இராக இலட்ஷணம்

1. திசி சக்கரத்தின் 2வது இராகம் எது?
2. நடைபைரவியின் நேர்பிரதி மத்யம இராகம் என்ன?
3. ஷண்முகப்ரியா இராகத்தின் ஜீவ ஸ்வரம், நியாச ஸ்வரங்களை குறிப்பிடுக.
4. இந்த இராகத்தின் ஸ்வரங்களைத் தருக.
5. க,ப,த என்னும் ஸ்வரங்களின் கிரஹ பேதத்தால் தோற்றுவிக்கும் இராகங்களைக் குறிப்பிடுக.
6. இவ்விராகத்தில் வெளிப்படுத்தப்படும் சுவை யாது?
7. ஷண்முகப்ரியா இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளை குறிப்பிடுக. (உருப்படி, தாளம், இயற்றியவர் என்பவற்றைக் குறிப்பிடவும்.
8. வசந்தா இராகத்தின் தாய் இராகம் எது?
9. இது எத்தனையாவது மேள இராகம்?
10. தனிமை, வர்ணனை முதலிய அம்சங்களை வெளிப்படுத்தும் இராகம் எது?
11. வசந்தா இராகத்தின் ஆரோகணம், அவரோகணத்தை தருக.
12. இவ் இராகத்தின் ஸ்வரஸ்தானங்களைக் குறிப்பிடுக.
13. வசந்தா இராகத்தின் ஜீவ, நியாச, கிரக ஸ்வரங்களைத் தருக.
14. வசந்தா இராகத்தின் மத்தியமத்தை கிரக பேதம் செய்தால் உருவாகும் இராகம் எது?
15. இவ் இராகமானது எவ் வேளையில் பாட உகந்தது?
16. இந்த இராகத்திற்கு அழகை கொடுக்கும் கமகம் எது?

17. இவ் இராகம் வெளிப்படுத்தும் ரஸம் யாது?

18. “வந்தாதரித்தருள்” கிருதியின் தாளம், இயற்றியவர் என்பவற்றைக் குறிப்பிடுக.

19. வசந்தா இராகத்தில் அமைந்த உருப்படிகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

20. மேலே குறிப்பிட்ட இராகங்களின் ஸ்வர சஞ்சாரங்களை பாடி பயிற்சி பெறுக.